Tel No: 91- 44 - 4852 4666 Fax: 91 - 44 - 4852 5666.
Website: www.stfc.in Email id: iepfclaims@stfc.in

NOTICE TO SHAREHOLDERS

This Notice is published pursuant to the provisions of Section 124(5) and Section 124(6) of the Companies Act, 2013 ('the Act') read along with the Investor Education and Protection Fund Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2016 (IEPF Rules) issued by Ministry of Corporate Affairs and subsequent amendment thereto.

As per the IEPF Rules, all shares in respect of which dividend has not been paid or claimed by the shareholders for seven consecutive years shall be credited to demat Account of the IEPF Authority by way of corporate action.

Pursuant to the IEPF Rules all the underlying shares in respect of which the dividend has remained unclaimed for seven consecutive years (i.e.) from the Interim Dividend 2015-16 onwards, will be transferred to IEPF Authority and the due date for such transfer is December 04, 2022. For details of those shares, the shareholders may refer the Company's website http://www.stfc.in under the 'Investor' section. Individual notices are sent to the respective shareholders at their registered addresses informing them about the due dates for transfer of unclaimed dividend to IEPF Authority. Accordingly, the concerned shareholders are requested to make an application to the Company/Company's Registrar and Share Transfer Agent (contact details are given in last para of this notice) by **November 23, 2022** for claiming the unpaid dividend (Interim) for the Financial Year 2015-16 onwards so that their shares are not transferred to the IEPF Authority. No claim shall lie against the Company in respect of unclaimed dividend and corresponding shares transferred to IEPF Authority pursuant to the said IEPF Rules. Shareholders may note that both the unclaimed dividend and shares once transferred to the IEPF Authority can be claimed from the IEPF Authority after following the procedures prescribed under the IEPF Rules (refer the IEPF website http://www.iepf.gov.in).

In case the Company does not receive any communications from the concerned shareholders by **November 23, 2022**, the Company shall credit those shares to the demat account of IEPF Authority as per procedure stipulated in the IEPF Rules. Kindly note that all future benefits like dividends arising on such shares would also be transferred to IEPF Authority.

For any queries on the above matter, shareholders are requested to contact the Deputy Nodal Officer Mrs.Shaila Menon-Telephone No. 022- 40959595 or Mr. Dnyandev Choudhary Mob.No.9004337233. (Fax No.022-40959597) email:iepfclaims@stfc.in or Company's Registrar and Share Transfer Agent, M/s.Integrated Registry Management Services Private Ltd. Mrs. Anusha N/Mrs. Uma Maheswari M. at Unit: Shriram Transport Finance Company Limited, 2nd Floor, "Kences Towers" No.1 Ramakrishna Street, North Usman Road,T Nagar, Chennai - 600 017.Telephone No. 91-44- 28140801 to 28140803 Fax : 91-44-28142479; email : anusha@integratedindia.in

For Shriram Transport Finance Company Limited
sd/-
U Balasundararao
Company Secretary

Place : Chennai
Date : 01st September, 2022

BEFORE THE HON'BLE NATIONAL COMPANY LAW TRIBUNAL, CHANDIGARH BENCH AT CHANDIGARH

CP (CAA) No.54/Chd/Pb/2022

IN THE MATTER OF:

TRIPUTI INFRASTRUCTURE PRIVATE LIMITED
(Petitioner no. 1 / Transferor Company)

With

MILKFOOD LIMITED
(Petitioner no. 2 / Transferee Company)

(Both the Companies are incorporated under the provisions of the Companies Act, 1956/2013 and having their registered office in Punjab)

A petition being Company Petition bearing CP (CAA) No.54/Chd/Pb/2022 (Second Motion Petition) under Sections 230 to 232 of the Companies Act, 2013, for sanction of Scheme of Amalgamation was jointly presented by the Petitioner on 22.08.2022. That Notice was issued in the said Company Petition on 22.08.2022 and the said Petition is fixed for hearing before the Hon'ble National Company Law Tribunal, Chandigarh Bench at Chandigarh on 04.11.2022. Any person desirous of supporting or opposing the said petition should send to the Petitioners Counsel, notice of his/her intention, signed by him or his advocate, with his name and address, so as to reach the Petitioner's counsel not later than 30 (Thirty) days before the date fixed for the hearing of the Petition. Where the person concerned seeks to oppose the said petition, the grounds of opposition or a copy of his/her affidavit shall be furnished with such notice. A copy of the petition will be furnished by the undersigned to any person requiring the same on payment of the prescribed charges for the same.

Sd/-
Adv. Malini Sud/Adv. SP Singh Chawla
Capex Legal
Advocates for the Petitioners
C-451, Basement, Defence Colony, New Delhi – 110 024
Phone: +91-9811087439, +011-40519011
email id: malini.sud@capexlegal.com

Date: 01.09.2022
Place: Punjab

அரசின் கோரிக்கையை ஏற்று தமிழகத்தில் மின்கட்டணத்தை உயர்த்துவதற்கான தடையை நீக்கி ஐகோர்ட் உத்தரவு

மதுரை, செப்.2

தமிழகத்தில் மின்கட்டணத்தை உயர்த்துவதற்கு விதிக்கப்பட்ட தடையை மதுரை ஐகோர்ட் நேற்று நீக்கியது.

தமிழகத்தில் மின்கட்டணத்தை உயர்த்த மின்சார வாரியம் முயற்சி மேற்கொண்டு வருகிறது. இதுதொடர்பாக மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் மின்வாரியம் கேட்டுக்கொண்டதன் பேரில் கருத்துகேட்பு கூட்டங்கள் நடைபெற்று வருகிறது.

இந்தநிலையில் நூற்பாலைகள் சங்கம் மற்றும் சில நிறுவனங்கள் சார்பில் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் சட்டத்துறை சார்ந்த உறுப்பினர் நியமிக்கப்படவில்லை. இந்த நிலையில் தமிழகத்தின் மின் கட்டணத்தை உயர்த்த அனுமதி கோரி மின்வாரியம் சார்பில் ஒழுங்குமுறை ஆணையத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை ஒழுங்குமுறை ஆணையம் விசாரணைக்கு ஏற்று, பொதுமக்களிடம் கருத்து கேட்பு கூட்டங்களை நடத்தி வருகிறது. தலைவர் மற்றும் ஒரு உறுப்பினர் மட்டும் இருக்கும்போது, ஒழுங்குமுறை ஆணையம் கூடியது சட்டவிரோதம். எனவே, மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தில் சட்டத்துறை சார்ந்த உறுப்பினர் நியமிக்கும் வரை கட்டண உயர்வு தொடர்பாக முடிவெடுக்கவும், கருத்து கேட்பு கூட்டம் நடத்தவும் தடை விதிக்க வேண்டும், என கூறியிருந்தனர்.

இந்த வழக்கை நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் ஏற்கனவே விசாரித்து, மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையத்தில் சட்டத்துறை உறுப்பினர் நியமிக்கும் வரை, மின் கட்டண உயர்வு தொடர்பான மனு மீது இறுதி உத்தரவு பிறப்பிக்க தடை விதித்து உத்தரவிட்டார்.

இந்தநிலையில் இந்த உத்தரவுக்கு எதிராக தமிழக மின்வாரியம் சார்பில் மதுரை ஐகோர்ட் டிவிஷன் பெஞ்சில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எஸ். சுந்தர், ஸ்ரீமதி ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழக அரசு சார்பில் ஆஜரான வக்கீல் வாதிடுகையில், மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையத்தில் சட்டம் சார்ந்த உறுப்பினரை நியமிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. இந்த நிலையில்தான் மதுரை ஐகோர்ட் தனி நீதிபதி, மின்கட்டண உயர்வு குறித்து முடிவெடுக்க தடை உத்தரவு பிறப்பித்தார். ஏற்கனவே மின்கட்டணத்தை உயர்த்துவது குறித்து மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையம் கருத்து கேட்பு கூட்டங்களை நடத்தி உள்ளது. மின்கட்டண அறிவிப்பு வெளியிடும் நேரத்தில் இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருப்பது பின்னடைவை ஏற்படுத்திவிட்டது. மின்கட்டணத்தை உயர்த்த வேண்டிய கட்டாயத்தில் அரசு உள்ளது. எனவே தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை ரத்துசெய்ய வேண்டும், என்று தெரிவித்தார்.

இதையடுத்து நீதிபதிகள், மின்கட்டணத்தை உயர்த்துவது சம்பந்தமாக இறுதி முடிவு எடுக்க தடை விதித்த தனி நீதிபதியின் உத்தரவுக்கு இடைக்கால தடை விதிப்பதாக உத்தரவிட்டனர்.

மேலும், இந்த மேல்முறையீட்டு மனு குறித்து எதிர்தரப்பினர் அனைவரும் பதில் அளிக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை ஒத்திவைத்தனர். இந்த உத்தரவு மூலம் கட்டண உயர்வு தொடர்பாக மின்சார ஒழுங்குமுறை ஆணையம் முடிவு எடுப்பதற்கான தடை தற்காலிகமாக நீங்கி இருக்கிறது.

நாளை மறுநாள் 17 வழித்தடங்கள் வழியாக ஊர்வலம்

சென்னையில் 4 இடங்களில் விநாயகர் சிலைகளை கரைக்க ஏற்பாடு

பாதுகாப்பு பணியில் 21 ஆயிரம் போலீசார்

சென்னை, செப்.2–

சென்னையில் 17 வழித்தடங்கள் வழியாக விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச்சென்று 4 இடங்களில் கடலில் கரைக்க போலீசார் அனுமதி வழங்கி உள்ளனர். பாதுகாப்பு பணியில் 21 ஆயிரம் போலீசார் ஈடுபடுகின்றனர்.

இது தொடர்பாக போலீசார் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:

சென்னையில் 1,352 பெரிய விநாயகர் சிலைகளும், ஆவடி கமிஷனரக எல்லைப்பகுதியில் 503 பெரிய விநாயகர் சிலைகளும், தாம்பரம் கமிஷனரக எல்லைப்பகுதியில் 699 சிலைகளும் ஆக மொத்தம் 2,554 பெரிய விநாயகர் சிலைகளும் இதர நூற்றுக்கணக்கான சிறிய சிலைகளும் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டுள்ளன.

இந்த சிலைகளுக்கு உரிய பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. சிலைகள் உள்ள பகுதியில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு உள்ளது. நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) இந்த சிலைகளை அனுமதிக்கப்பட்ட வழித்தடங்கள் வழியாக, 4 சக்கர வாகனங்களில் வைத்து ஊர்வலமாக எடுத்து செல்ல வேண்டும்.

கண்காணிப்பு கோபுரங்கள்

சென்னையை பொறுத்தமட்டில் விநாயகர் சிலைகள் ஊர்வலத்துக்கு மட்டும் பாதுகாப்புக்காக 15 ஆயிரம் போலீசாரும், 2 ஆயிரம் ஊர்க்காவல் படை வீரர்களும் பயன்படுத்தப்படுவார்கள். தாம்பரம் மற்றும் ஆவடி கமிஷனரக பகுதிகளையும் சேர்த்து மொத்தம் 21 ஆயிரத்து 800 போலீசார், ஊர்க்காவல் படை வீரர்கள் 2 ஆயிரத்து 650 பேர் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டுள்ளனர்.

கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு அதில் போலீசார் நின்று பைனாகுலர் வழியாக கண்காணிப்பார்கள். ராட்சத கிரேன்கள் மற்றும் படகுகள் மூலம் சிலைகளை கடலில் கரைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை பட்டினப்பாக்கம் சீனிவாசபுரம் கடற்கரை, நீலாங்கரை பல்கலைநகர் கடற்கரை, காசிமேடு மீன்பிடி துறைமுகம், திருவொற்றியூர் பாப்புலர் எடைமேடை பின்புறம் ஆகிய 4 இடங்களில் சிலைகளை கரைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகளை 17 வழித்தடங்கள் வழியாக ஊர்வலமாக எடுத்துச்செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதர இடங்களில் ஊர்வலம் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

நுங்கம்பாக்கம், சிந்தா திரிப்பேட்டை, எழும்பூர், புதுப்பேட்டை, பெரம்பூர், வியாசர்பாடி, ஆர்.கே.நகர், புளியந்தோப்பு, படாளம், சவுகார்பேட்டை, அயனாவரம் ஆகிய பகுதிகள் மற்றும் அதை சுற்றி உள்ள பகுதிகளில் உள்ள சிலைகளை போலீசார் காட்டும் குறிப்பிட்ட வழித்தடங்கள் வழியாக ஊர்வலமாக எடுத்துச்சென்று பட்டினபாக்கம் சீனிவாசபுரம் கடலில் கரைக்க வேண்டும்.

இதேபோல அடையாறு, திருவான்மியூர் அதை சுற்றி உள்ள பகுதிகளில் உள்ள சிலைகள் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு, நீலாங்கரை பல்கலைநகர் கடலில் கரைக்கப்பட வேண்டும்.

வடசென்னை பகுதிகளான தங்கசாலை, வண்ணாரப்பேட்டை, ராயபுரம், தண்டையார்பேட்டை மற்றும் அதை சுற்றி உள்ள பகுதிகளில் உள்ள சிலைகளை ஊர்வலமாக கொண்டு சென்று காசிமேடு மீன்பிடி துறைமுக கடலில் கரைக்க வேண்டும்.

தாம்பரம் போலீஸ் கமிஷனரக எல்லைக்கு உட்பட்ட மறைமலைநகர், கூடுவாஞ்சேரி, தாம்பரம், குரோம்பேட்டை, பல்லாவரம், திரிசூலம், மீனம்பாக்கம், குன்றத்தூர், அனகாபுத்தூர் அதை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சிலைகள் குறிப்பிட்ட 4 வழித்தடங்கள் மூலம் வேளச்சேரி விஜயநகரம் சந்திப்பை அடைந்து, திருவான்மியூர் வழியாக கொண்டு செல்லப்பட்டு, நீலாங்கரை பல்கலைநகர் கடலில் கரைக்கப்பட வேண்டும்.

ஆவடி கமிஷனரக எல்லைக்கு உட்பட்ட திருநின்றவூர், பட்டாபிராம், ஆவடி, அம்பத்தூர், கொரட்டூர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள சிலைகள் பாடி மேம்பாலம் வழியாக, நியூ ஆவடி சாலை, அண்ணா ஆர்ச், நெல்சன் மாணிக்கம் சாலை வழியாக வள்ளுவர் கோட்டம் சந்திப்புக்கு வர வேண்டும்.

அதேபோல பூந்தமல்லி, காட்டுப்பாக்கம், போரூர் பகுதி சிலைகள் விருகம்பாக்கம், வடபழனி பகுதி சிலைகளோடு இணைந்து வள்ளுவர்கோட்டம் சந்திப்பை அடைய வேண்டும். அதோடு திருவேற்காடு, வானகரம், மதுரவாயல் பகுதி சிலைகளும் ஈ.வே.ரா.பெரியார் நெடுஞ்சாலை வழியாக கோயம்பேடு அடைந்து அங்கிருந்து வள்ளுவர் கோட்டம் சென்றடைய வேண்டும். பின்னர் அங்குள்ள அத்தனை சிலைகளையும் ராதாகிருஷ்ணன் சாலை, காந்தி சிலை வழியாக எடுத்துச் சென்று பட்டினபாக்கம் சீனிவாசபுரம் கடலில் கரைக்க வேண்டும்.

மணலி, மாத்தூர், காரனோடை, பாடியநல்லூர், செங்குன்றம், புழல் பகுதி சிலைகள் மூலக்கடை, பேசின்பாலம், தங்கசாலை சந்திப்பு, ராஜாஜிசாலை, முத்துசாமி பாலம் சந்திப்பு வழியாக பட்டினபாக்கம் கடலை சென்றடைய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை, முகாம் அலுவலகத்தில் ஐகோர்ட் நீதிபதிகள் எம்.துரைசாமி, பரேஷ் உபாத்யாய் ஆகியோர் நேற்று சந்தித்து சென்னை ஐகோர்ட்டில் வருகிற 4ந்தேதி நடைபெறவுள்ள பழைய சட்ட கல்லூரி பராம்பரிய கட்டிடத்தை புதுப்பித்தல் மற்றும் புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டும் விழாவுக்கான அழைப்பிதழை வழங்கினார்கள். உடன் அரசு கூடுதல் தலைமை வக்கீல் ரவீந்திரன் உள்ளார்.

இளங்கலை பட்டப்படிப்புகளுக்கான 2ம் ஆண்டு பருவத்தேர்வுகளில் தமிழ் மொழி பாடத்திட்டம் கட்டாயம்

பல்கலைக்கழகங்களுக்கு, உயர்கல்வித்துறை உத்தரவு

சென்னை, செப்.2

சில பல்கலைக்கழகங்களில் இளங்கலை பட்டப்படிப்புகளில் 2ம் ஆண்டு பருவத்தில் தமிழ் மொழி பாடத்திட்டம் நடத்தப்படுவதில்லை என்று புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன.

இதனை சரிசெய்யும் வகையிலும், பல்கலைக்கழகங்களில் 2ம் ஆண்டு பருவத்தேர்வுகளில் தமிழ் மொழி பாடத்திட்டத்தை கொண்டு வரும் வகையிலும் உயர்கல்வித்துறை அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் ஒரு உத்தரவை பிறப்பித்து இருக்கிறது.

அந்தவகையில் உயர்கல்வித் துறை முதன்மை செயலாளர் தா. கார்த்திகேயன், உயர்கல்வித்துறையின் கீழ் இயங்கும் அனைத்து பல்கலைக்கழக பதிவாளர்கள், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:

உயர்கல்வித்துறையின் கீழ் இயங்கும் அனைத்து பல்கலைக்கழகங்களில் (அண்ணா மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகங்கள் நீங்கலாக) இளங்கலை பட்டப்படிப்புகளுக்கு நடத்தப்பட்டு வரும் 2ம் ஆண்டு பருவத் தேர்வுகளில் தமிழ் மொழி பாடத்திட்டம் சில பல்கலைக்கழகங்களில் நடத்தப்படு வதில்லை என்று அறியப்படுகிறது. இந்த நிலையினை மாற்றி அனைத்து பல்கலைக்கழகங்களிலும் இளங்கலை பட்டப்படிப்புகளுக்கான 2ம் ஆண்டு பருவத் தேர்வுகளிலும் இனி தமிழ் மொழி பாடத் திட்டத்தினை சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, இளங்கலை பட்டப்படிப்புகளுக்கு நடத்தப் பட்டு வரும் 2ம் ஆண்டு பருவத்தேர்வுகளிலும், இனி தமிழ் மொழி பாடத்திட்டத்தினை சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. நிர்வாகி மறைவு: மு.க.ஸ்டாலின் அஞ்சலி

சென்னை, செப்.2

சென்னை திருவல்லிக்கேணி பகுதி தி.மு.க. அவைத்தலைவர் க.வே. செழியன் நேற்று மரணம் அடைந்தார். அவரது உடலுக்கு, தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் நேரில் சென்று மலரஞ்சலி செலுத்தினார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

சென்னை திருவல்லிக்கேணி பகுதியில் கட்சியை வளர்த்த உண்மை தொண்டர் முன்னாள் பகுதி செயலாளரும், தற்போதைய அவைத்தலைவருமான க.வே. செழியன் மறைவுற்றார் என்று அறிந்து மிகவும் வேதனையடைகிறேன்.

ஈடுசெய்ய முடியாத இழப்பால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திருவல்லிக்கேணி பகுதியை சேர்ந்த கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

SHRIRAM Transport Finance Company Limited A WINNING RELATIONSHIP

Corporate Identity No. (CIN) : L65191TN1979PLC007874

பதிவு அலுவலகம்: ஸ்ரீடவர்ஸ், மனை எண். 14ஏ, சவுத் பேஸ், தொழில்பேட்டை, கிண்டி, சென்னை 600 032, தமிழ்நாடு, இந்தியா.

Telephone +91-44-4852 4666, Fax : +91-44-4852 5666, Website: www.stfc.in Email id: iepfclaims@stfc.in

பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் அறிவித்தபடி, கம்பெனிகள் சட்டம் 2013 ('சட்டம்'), பிரிவு 124(5) மற்றும் 124 (6) மற்றும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கியல், தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திரும்ப அளித்தல்) விதிகள் 2016 (ஐஇபிஎப் விதிகள்) மற்றும் அதற்கடுத்த திருத்தங்களின்படி, இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அதன்படி, தொடர்ந்து ஏழு ஆண்டுகள் டிவிடெண்ட் பெறாமல் அல்லது கோராமல் இருந்த அனைத்து பங்குகளும் கார்ப்பரேட் நடவடிக்கை மூலம் ஐஇபிஎப் ஆணையத்தின் டீமேட் கணக்கில் வரவு வைக்கப்படும்.

ஐஇபிஎப் விதிகளின்படி, 2015–16–ம் ஆண்டின் இடைக்கால டிவிடெண்ட் தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக (அதாவது) டிவிடெண்ட் கோரப்படாமல் இருக்கும் அனைத்து அடிப்படை பங்குகளும் ஐஇபிஎப் ஆணையத்திற்கு மாற்றப்படும் மற்றும் அத்தகைய பரிமாற்றத்திற்கான கடைசி தேதி டிசம்பர் 04, 2022 ஆகும். இந்த பங்குகள் குறித்த விவரம் கம்பெனியின் இணையதளத்தில் உள்ள 'முதலீட்டாளர்' பிரிவின் கீழுள்ள http://www.stfc.inல் உள்ளது. ஐஇபிஎப் ஆணையத்திற்கு கோரப்படாத டிவிடெண்டை மாற்றுவதற்கான நிலுவைத் தேதிகள் குறித்து அந்தந்த பங்குதாரர்களுக்கு அவர்களின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு தனிப்பட்ட அறிவிப்புகள் அனுப்பப்படுகின்றன. நிதி ஆண்டு 2015–16க்கு செலுத்தப்படாத டிவிடெண்டை (இடைக்கால) கோர சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் கம்பெனி/கம்பெனிகளின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவருக்கு (தொடர்பு கொள்ள வேண்டிய விவரங்கள் இந்த அறிவிப்பின் கடைசி பத்தியில் அளிக்கப்பட்டுள்ளது.) விண்ணப்பம் ஒன்றை நவம்பர் 23, 2022–க்குள் தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு செய்தால் அவர்களின் பங்குகள் ஐஇபிஎப் ஆணையத்துக்கு மாற்றப்பட மாட்டாது. மேற்சொன்ன ஐஇபிஎப் விதிகளின்படி, ஐஇபிஎப் ஆணையத்துக்கு மாற்றப்பட்ட டிவிடெண்ட் கோராத மற்றும் இதே பங்குகளுக்காக கம்பெனிக்கு எதிராக எதையும் கோர முடியாது. ஐஇபிஎப் ஆணையத்துக்கு மாற்றப்பட்ட கோரப்படாத டிவிடெண்ட் மற்றும் பங்குகளை, ஐஇபிஎப் விதிகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றி ஐஇபிஎப் ஆணையத்திடமிருந்து திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். (ஐஇபிஎப் இணையதளம் http://www.iepf.gov.inஐ பார்க்கவும்)

நவம்பர் 23, 2022க்குள் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிடமிருந்து எந்தவித தகவலும் கம்பெனியினால் பெறப்படாத பட்சத்தில், ஐஇபிஎப் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறைகளின்படி அந்த பங்குகளை கம்பெனி ஐஇபிஎப் ஆணையத்தின் டீமேட் கணக்கில் வரவு வைத்துவிடும். அந்த பங்குகளின் மீதான எதிர்கால பலன்கள், டிவிடெண்டுகள் ஆகியவை ஐஇபிஎப் ஆணையத்திற்கு மாற்றப்படும்.

மேற்கண்ட விஷயம் குறித்து ஏதேனும் சந்தேகம் இருப்பின் அது குறித்து துணை ஒருங்கிணைப்பு அதிகாரி திருமதி ஷைலா மேனன், தொலைபேசி எண். 022–40959595 அல்லது திரு. தியான்தேவ் சவுத்ரி மொபைல் எண். 9004337233 (பேக்ஸ் எண். 022–40959597) இமெயில்: iepfclaims@stfc.in அல்லது கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர், M/s. இன்டக்ரேட்டட் ரிஜிஸ்ட்ரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், திருமதி அனுஷா என்/திருமதி உமா மகேஸ்வரி எம், யூனிட்: ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 2வது தளம், "கென்சஸ் டவர்ஸ்", எண்.1, ராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை–600 017. தொலைபேசி எண்: +91–44–28140801 to 28140803 பேக்ஸ்:+91–44–28142479 இமெயில்: anusha@integratedindia.in ஆகியோரை பங்குதாரர்கள் அணுகலாம்.

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
U. விவேக் எம் அச்வால்
கம்பெனி செயலாளர்

இடம்: சென்னை
தேதி : செப்டம்பர் 1, 2022

PUBLIC NOTICE

Notice is hereby given that the share certificates No(s) 225186 for 420 shares bearing distinctive No(s) 188496160-188496579, Folio No. DBL0225186, standing in the name(s) of RAVINDRA MOHAN GOEL joint with LT. SEEMA in the books of M/s. DALMIA BHARAT LTD., have been lost and the applicant have applied to the Company for issue of duplicate share certificate(s) in lieu thereof. Any person(s) who have claim(s) on the said shares should lodge such claim(s) with the Company's registered office at Dalmiapuram, Lalgudi, Tiruchirapalli Dist. Tamil Nadu 621651 within 15 days from the date of this notice failing which the Company will proceed to issue duplicate share certificate(s) in respect of the said shares.

Date : 02/09/2022
Place : Chennai

Name(s) of Claimant(s)
RAVINDER MOHAN GOEL
(D-8/17 Ground Floor, Nr Manav Chowk, Sector-15, West Delhi-110085)

KLK ELECTRICAL LIMITED

Old No. 32, New No. 64, 8th Cross Street, West Shenoy Nagar, Chennai-600030
CIN:L72300TN1980OPLC008230 email: admin@klk.co.in

EXTRACT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30TH JUNE 2022

(Rupees in Lakhs)

Sl. No.	PARTICULARS	STANDALONE				CONSOLIDATED			
		Quarter Ended			Year Ended	Quarter Ended			Year Ended
		30-06-2022	31-03-2022	30-06-2021	31-03-2022	30-06-2022	31-03-2022	30-06-2021	31-03-2022
1.	Total Income from Operations	12.36	40.24	0	50.23	1077.74	1088.17	0	1099.37
2.	Net Profit / Loss for the period (Before Tax, exceptional and / or extraordinary items)	7.76	136.34	(1.28)	137.10	129.90	241.55	0	242.22
3.	Net Profit / Loss for the period (After Tax exceptional and / or extraordinary items)	7.76	129.21	(1.28)	129.97	116.88	223.92	0	224.59
4.	Equity Share Capital (face value of Rs. 10/- each)	865	865	265	865	865	865	265	865
5.	Other Equity	-	-	-	-	-	-	-	-
6.	Earnings per share (of Rs. 10/- each) Rs								
	1) Basic	0.09	1.49	(0.05)	1.50	1.35	2.32	-	2.60
	2) Diluted	0.09	1.49	(0.05)	1.50	1.35	2.32	-	2.60

Note: a) The above is an extract of the detailed format of Quarterly Financial Results filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Financial Results is available on the websites of the Stock Exchange and the Company namely www.bseindia.com

Place : Chennai
Date : 01.09.2022

for KLK ELECTRICAL LIMITED
On behalf of Board of Directors
R. Ravikumar Rao
Director

TNT தமிழ்நாடு ஸ்டீல் டியூப்ஸ் லிமிடெட்

MFRS. & EXPORTERS OF : MS 7 GI, SQUARE & RECTANGLE STEEL PIPES

பதிவு அலுவலகம்: மெர்குரி அபார்ட்மெண்ட்ஸ், முதல் தளம், எண். 65, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை–600 008.

PHONES : 28555653, 28555733 FAX : 28555643 Web : www.tntpipes.com

E-Mail: purchase@tntpipes.com; sales@tntpipes.com ; contact@tntpipes.com;

CIN: L27110TN1979PLC007887

காணொளி காட்சி மூலம் 43வது வருடாந்திர பொதுக்கூட்டம் குறித்து பங்குதாரர்களுக்கு அறிவிப்பு – ஆண்டறிக்கைகள் பெற மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்ய கோரிக்கை

கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட 5 மே 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 20/2020, 08 ஏப்ரல் 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 14/2020, 13 ஏப்ரல் 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 17/2020 மற்றும் 03.06.2022 தேதியிட்ட சமீபத்திய செபி சுற்றறிக்கையின்படி இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், கம்பெனியின் 43வது வருடாந்திர பொதுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை, **27 செப்டம்பர் 2022 அன்று காலை 10.00 மணிக்கு (இந்திய நேரப்படி)** காணொளி காட்சி (VC)/இதர ஒலி ஒளி சாதனங்கள் (OAVM) மூலமாக கம்பெனிகள் சட்டம் 2013ன் (சட்டம்) பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் மேற்சொன்ன சுற்றறிக்கைகளின்படி நடைபெறுகிறது.

மேற்சொன்ன சுற்றறிக்கைகளின் ஆணை மற்றும் மே 12, 2020 தேதியிட்ட செபி சுற்றறிக்கை SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79ன்படி, கம்பெனி அல்லது வைப்புத்தொகை பங்கேற்பாளரிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த பங்குதாரர்களுக்கு 2021–22 ஆண்டுக்கான ஆண்டறிக்கை மற்றும் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு ஆகியவை மின்னணு முறையில் மட்டுமே அனுப்பப்படும். இவை கம்பெனி மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் அதாவது www.tntpipes.com மற்றும் www.bseindia.comல் கிடைக்கும்.

காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும்/தங்கள் மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் பிற விவரங்களை கம்பெனியில் பதிவு செய்யாத உறுப்பினர்களின் கவனத்திற்கு

* **தற்போது நிலவிவரும் தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக, சம்பந்தப்பட்ட அனைவரின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காக, முதலீட்டாளர்கள் தங்கள் கோரிக்கைகளை ஆன்லைனில் அல்லது மின்னஞ்சல்கள் மூலம் சமர்ப்பிக்குமாறும் முடிந்த வரை காகித ஆவணங்களை கையாள்வதைத் தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

* நீங்கள் https://www.cameoindia.com/ஐப் பார்வையிடலாம் மற்றும் மின்னஞ்சல், மொபைல் எண் மற்றும் பிற விவரங்களை பதிவு செய்வதற்கு ஆன்லைனில் தகவல்களை சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல்களை பின்பற்றலாம்.

* கம்பெனி இணையதளத்தின் லிங்க் link https:/www.tntpipes.com//furnishing-information-terms-sebi உள்ள வடிவமைப்புடன் படிவத்தின் ஸ்கேன்ட் செய்யப்பட்ட நகல் மற்றும் இதர தேவையான ஆவணங்களை மின்னஞ்சல் மூலமாக ஆர்டிஏ–க்கு investor@cameoindia.com or murali@cameoindia.com ல் அனுப்பலாம்.

* மாற்றாக, மேற்கூறிய தகவல்களை ஆர்டிஏ அதாவது கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், யூனிட்: டிபிஎல், சுப்பிரமணியன் கட்டிடம், 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை 600 002க்கு தபால் அல்லது கூரியர் மூலம் அனுப்பலாம். தொலைபேசி எண்: 04428460390. **டிமேட்டில் பங்குகளை வைத்திருக்கும் நபர்கள் மேலே உள்ள நோக்கத்திற்காக அவர்களின் வைப்புத்தொகை பங்கேற்பாளரை அணுகலாம்.** மேலும், வருடாந்திர அறிக்கைகளை மின்னஞ்சல் மூலம் பெறுவதற்கான விருப்பம், அத்தகைய பங்குகள் தொடர்பாக முறையாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்தலாம்.

கூட்டத்திற்கு முன்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிப்பதற்கான விரிவான வழிமுறைகள் மற்றும் கூட்டத்தில் பங்கேற்பது/பேசுவது/வாக்களிப்பது ஆகியவை வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கிடைக்கும்.

உறுப்பினர்கள் தங்களது தொடர்பு விவரங்கள் மற்றும் பிற விவரங்களை பதிவு செய்ய அல்லது மாற்றுவதற்கு வசதியாக இந்த பொது அறிவிப்பு முன்கூட்டியே வெளியிடப்படுகிறது. உறுப்பினர்கள் தயவுசெய்து இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தகவல்களை விரைவாக வழங்கலாம், இதனால் நிறுவனம் அறிவிப்புகளையும் பிற தகவல்களையும் உடனடியாக அனுப்ப முடியும். மேலும் விளக்கங்களுக்கு உறுப்பினர்கள் மேலே குறிப்பிட்டுள்ள ஆர்டிஏ–வை தொடர்பு கொள்ளலாம்.

குழுவின் ஆணைப்படி
தமிழ்நாடு ஸ்டீல் டியூப்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– C.முருகானந்தம்
கம்பெனி செயலாளர்
(M.No.ACS—12232)

இடம் : சென்னை
தேதி : 29.08 2022

IDFC
IDFC LIMITED

ஐடிஎப்சி லிமிடெட்

CIN: L65191TN1997PLC037415 மின்னஞ்சல்: info@idfclimited.com வலைத்தளம்: www.idfclimited.com

பதிவு அலுவலகம்: 4 வது மாடி, கேபிடல் டவர், 555 அண்ணா சாலை, திரு வி க குடியிருப்பு, தேனாம்பேட்டை, சென்னை 600 018 தொலைபேசி: +91 44 4564 4201/4202/4223

கார்ப்பரேட் அலுவலகம்: 906/907, 9 வது மாடி, எம்பசி சென்டர், ஜம்னாலால் பஜாஜ் சாலை, நரிமன் பாயிண்ட், மும்பை 400 021 தொலைபேசி :+91 22 2282 1549

கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட மே 05, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்கள்.20/2020, மே 5, 2022 தேதியிட்ட 02/2022 மற்றும் செபியின் மே 13, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை ஆகியவற்றுக்கு இணங்க, ஐடிஎப்சி லிமிடெட் ("கம்பெனி அல்லது ஐடிஎப்சி") உறுப்பினர்களின் இருபத்து ஐந்தாவது மெய்நிகர் வருடாந்திர பொதுக்கூட்டம் ("AGM") செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 27, 2022 அன்று காலை 11.00 மணிக்கு (இந்திய நேரப்படி) நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. மின்னணு வருடாந்திர பொதுக்கூட்டம் கூட்டுவது பற்றிய அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை செயல்படுத்த கம்பெனியின் 25வது வருடாந்திர பொதுக்கூட்டம் இரண்டு வழிகள் கொண்ட காணொளி காட்சி ("e–AGM") மூலமாக நடத்தப்படுகிறது. காணொளி காட்சி மூலம் மட்டுமே மின்னணு வருடாந்திர பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம். மின்னணு வருடாந்திர பொதுக்கூட்டத்தில் காணொளி காட்சி/OAVM வசதி அளிக்க கேபின் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், பதிவாளர்கள் மற்றும் பரிமாற்ற முகவர்களை ("ஆர்டிஏ") கம்பெனி நியமித்துள்ளது.

சுற்றறிக்கைகளின்படி, வருடாந்திர அறிக்கை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களுடன் 25வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு காகித வடிவில் அனுப்பும் முறை கைவிடப்பட்டுள்ளது. நிதி ஆண்டு 22–க்கான வருடாந்திர அறிக்கை மற்றும் அறிவிப்பு ஆகியவற்றை செப்டம்பர் 1, 2022 அன்று கம்பெனி/டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள்/ பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவரிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் கம்பெனி அனுப்பியுள்ளது. மேலும் அந்த ஆவணங்கள் கம்பெனியின் இணையதளம் www.idfclimited.com, ஆர்டிஏவின் இணையதளம் https://www.kfintech.com மற்றும் பங்குச் சந்தைகளின் இணையதளங்கள் பிஎஸ்இ லிமிடெட் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் www.nseindia.comல் கிடைக்கிறது. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108, கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) 2015ன் விதி 44ன்படி, 25வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் நிறைவேற்ற திட்டமிட்டுள்ள அனைத்து அல்லது ஏதாவது ஒரு தீர்மானத்தின் மீது மின்னணு முறையில் காகித வடிவில் அல்லது பத்திரமில்லாத வகையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் வாக்களிப்பதற்கான வசதியை கம்பெனி அளிக்கிறது. மின்னணு வாக்குப்பதிவு முறையை (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு) உபயோகித்து உறுப்பினர்கள் தங்களது வாக்குகளை அளிக்கலாம். மின்னணு முறையில் வாக்களிப்பதற்கு தகுதி உள்ள பங்குதாரர்களை தீர்மானிக்க கட்ஆப் தேதியாக செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 20, 2022ஐ கம்பெனி நிர்ணயம் செய்துள்ளது. மின்னணு வாக்குப்பதிவு வசதியை அளிக்க முகவராக கேபின் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்டின் சேவைகளுக்கு கம்பெனி ஏற்பாடு செய்துள்ளது. மின்னணு வாக்குப்பதிவிற்கான நடைமுறைகள் மற்றும் அதன் விவரங்கள் (பயனர் ஐடி மற்றும் பாஸ்வேர்ட் உட்பட) அறிவிப்பின் "மின்னணு வாக்குப்பதிவுக்கு உறுப்பினர்களுக்கான வழிமுறைகள்" என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன ஆவணங்கள் கம்பெனியின் இணையதளம் www.idfclimited.com மற்றும் ஆர்டிஏ இணையதளம் https://www.kfintech.comலும் கிடைக்கின்றன.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வியாழக்கிழமை, செப்டம்பர் 22, 2022 அன்று காலை 9 மணிக்கு தொடங்கி திங்கட்கிழமை, செப்டம்பர் 26, 2022 அன்று மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது. அதன்பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முறை ஆர்டிஏ–வினால் நிறுத்தப்படும் மற்றும் செப்டம்பர் 26, 2022 அன்று மாலை 5 மணிக்கு பின்னர் வாக்களிப்பு அனுமதிக்கப்பட மாட்டாது. ஒரு தீர்மானத்தின் மீது பங்குதாரர் வாக்களித்து விட்டால் பின்னர் அதனை மாற்ற பங்குதாரர் அனுமதிக்கப்பட மாட்டார் அல்லது மீண்டும் வாக்களிக்க முடியாது.

கட் ஆப் தேதியான செப்டம்பர் 20, 2022 அன்று உறுப்பினர்கள்/பயனுள்ள உரிமையாளர்கள் பதிவேட்டில் கண்டுள்ள பெயர்களில் உள்ள நபர் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.

மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு தேதி அதாவது செப்டம்பர் 1, 2022க்கு பிறகு கம்பெனியின் உறுப்பினரான நபர் மற்றும் கட் ஆப் தேதியான செப்டம்பர் 20, 2022 அன்று பங்குகளை வைத்துள்ளவர் idfc.cs@kfintech.comக்கு ஒரு கோரிக்கை அனுப்பி உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம். பயனர் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெறுவதற்கான விரிவான நடைமுறை அறிவிப்பில் உள்ள குறிப்புகளில் வழங்கப்பட்டுள்ளது, இது கம்பெனி மற்றும் ஆர்டிஏ–ன் இணைய தளத்தில் கிடைக்கிறது.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர் மின்னணு வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மின்னணு வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க உரிமை இல்லை.

மின்னணு வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்னணு வாக்குப்பதிவிற்கான வசதியையும் கம்பெனி அளிக்கிறது. விரிவான வழிமுறைகளுக்கு அறிவிப்பில் உள்ள குறிப்பு எண் 19ஐ தயவு செய்து பார்வையிட வேண்டும்.

மின்னணு வாக்குப்பதிவு நடைமுறைகளை ஆராய திருமதி. மனிஷா மகேஸ்வரி (உறுப்பினர் எண். ACS 30224 மற்றும் சிபி. 11031) M/s. பண்டாரி அண்ட் அசோசியேட்ஸ் கம்பெனி செயலாளர் அவர்களை ஆராய்வாளராக கம்பெனியின் இயக்குனர்கள் குழு நியமனம் செய்துள்ளது.

மின்னணு வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கான மேற்சொன்ன அறிவிப்பினை பெறாத உறுப்பினர் அதன் மாற்று நகலை கோரிப் பெறலாம். மின்னணு வாக்குப்திவு தொடர்பாக ஏதேனும் கேள்விகள்/குறைகள் இருந்தால், பங்குதாரர்கள் https://evoting.kfintech.comன் (RTA இணையதளம்) அடிக்கடி கேட்கப்படுபவின் கேள்விகள் பகுதியை பார்வையிடலாம் அல்லது திருமதி கிருஷ்ன பிரியா எம், மூத்த மேலாளர் – கார்ப்பரேட் ரிஜிஸ்திரி, கேபின் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், பிரிவு: ஐடிஎப்சி லிமிடெட், செலினியம் டவர் பி, ப்ளாட் எண் 31 & 32 கச்சிபோவ்லி, நிதி மாவட்டம், நானக்ரம்குடா, செரிலிங்கம்பள்ளி ஐதராபாத் 500 032 தொலைபேசி: +91 40 6716 2222, பேக்ஸ் +91 40 2342 0814 அவர்களை அணுகலாம் மற்றும் கட்டணமில்லா எண்: 1800 345 4001. மின்னஞ்சல்: priya.maddula@kfintech.com அல்லது einward.ris@kfintech.com அல்லது idfc.cs@kfintech.comல் தொடர்பு கொள்ளலாம்.

ஐடிஎப்சி லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
ஷிவாங்கி மிஸ்திரி
கம்பெனி செயலாளர்
ஏ.சி.எஸ்–52174

இடம்: மும்பை
தேதி: செப்டம்பர் 01,2022